**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை**

**IA No.7/2025**
**in**
**OS no.26/2022**
**---**

1. குமார்
2. சுப்பிரமணி
3.நாகராஜன்
4.சரவணகுமார்
5.முத்துராஜா
6.கண்ணன் .....மனுதாரர்கள்/ப்ரோபோஸ்ட்
4 முதல் 9 பிரதிவாதிகள்

**/எதிர்/**

1.ஜெயராஜன் ...எதிர்மனுதாரர்/வாதி
1.தமிழக அரசுக்காக, அதன்
சிவகங்கை மாவட்ட ஆட்சியர்
3.வட்டாட்சியர், திருப்புவனம்
4.ஊராட்சி மன்ற தலைவர்,
முக்குடி, ஊராட்சி ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 09.03.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.வீரபாண்டி அவர்கள் ஆஜராகியும், ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

தாவா வழக்கில் மனுதாரர்களான குமார், சுப்பிரமணி, நாகராஜன், சரவணகுமார், முத்துராஜா, கண்ணன் ஆகியோரை4 முதல் 9 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதிக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.12 17:31:40 +0530

**<u>1) மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர்கள் இந்த நிர் மனுவின் மனுதாரர்கள்/4 முதல் 9 ப்ரோபோஸ்ட் பிரதிவாதிகள்ஆவார்கள். தாவா 2வது இலக்க சொத்தாகிய முக்குடி குரூப் 144/2 ல் 0.77.5 ஹெக்டேர் நிலம் அரசு ஆவணங்களில் அருள்மிகு பிள்ளையார் கோவில் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், தாவா 2வது சொத்தில் இருந்து தான் மேற்படி பிள்ளையார் கோவில் விசேஷங்கள் மற்றும் விநாயகர் சதுர்த்தி விசேஷங்களை தாங்கள் நடத்தி வருகின்றோம் என்றும், தாங்கள் பிள்ளையார் கோவிலை வழிபடுபவர்களாகவும், தாவா 2வது இலக்க சொத்தை வாதி எப்போதும் அனுபவம் செய்தது கிடையாது என்றும், இந்நிலையில் தாவா வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்று தற்போது தங்களுக்கு தெரிய வருகின்றது என்றும், இதனால் தாவா 2வது லக்க சொத்தை பொறுத்து தாங்கள் பிள்ளையார் கோவிலை வழிபடுபவர்கள் என்ற முறையில் நடத்த வேண்டி உள்ளது என்றும் தங்களை தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கு நடத்தா விடில் தங்களுக்கு பெருத்த பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்றும், தங்களை தரப்பினராக சேர்த்து நடத்துவதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்றும், ஆகையால் தாவா வழக்கில் மனுதார்களான குமார், சுப்பிரமணி, நாகராஜன், சரவணகுமார் முத்துராஜா, கண்ணன் ஆகிய எங்களை 4 முதல் 9 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்</u>**

தாவா 1வது இலக்க சொத்து 1ம் எதிர்மனுதாரருக்கு கிரையப் பாத்தியப்பட்ட சொத்து என்றும், 2வது இலக்கச் சொத்தான சர்வே எண். 144/2 அதன் விஸ்தீரணம் 0.77.5 ஏர்ஸூக்கு ஏக்கர் 1 செண்ட் 92 அளவுள்ள இடத்தில் ஆகையர் தென்கிழக்கு மூலையில் விநாயகர் கோவில் இருந்து வரக்கூடிய 4 செண்ட் நீங்கலாக மீதமுள்ள 1 ஏக்கர் 88 செண்ட் அளவுள்ள இடம் மற்றும் அதில் உள்ள தென்னை மற்றும் கொய்யா விருட்சங்களும், பருத்திசாகுபடியும் செய்து நாளதுதேதிவரை 1ம் எதிர்மனுதாரரே அவரது தனித்த உடைமையில் வைத்து அனுபவம் செய்து வருகிறதாகவும், தாவா 2வது லக்கச் சொத்தானது வருவாய்துறை ஆவணங்களில் அரசு புறம்போக்கு என்று பதிவாகியுள்ளது என்றும், தாவா 1வது லக்கச் சொத்தோடு தாவா 2வது லக்கச் சொத்தை ஒரே சேகரமாக வைத்து சட்ட காலங்களைக் கடந்த நிலையில், 35 ஆண்டுகளுக்கு மேலாக யாவரும் அறிய நீடித்த நிராட்சேபனை அற்ற நிலையில் அனுபவம் செய்து

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.12 17:31:46 +0530

வருவதால், தாவா 2வது லக்கச் சொத்தைப் பொறுத்து தனக்கு Title by Adverse Possession–ம் சித்தித்துள்ளது என்றும், தாவா வழக்கானது விசாரணைப்பட்டியலில் இடப்பட்டு, தனது தரப்பு சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு, 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் No oral evidence என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையில் 3ம் பிரதிவாதி தரப்பிலும் 30.06.2025ம் தேதி வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு, வாதுரைக்காக 15.07.2025 வாய்தா ஏற்பட்ட நிலையில் தாவா மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த நிலையில், 3ம் பிரதிவாதியான ஊராட்சி மன்றத்தலைவர், முக்குடி ஊராட்சி என்ற பதவியினைக் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பதால் மேற்படி 3ம் பிரதிவாதியின் பதவி காலமும் முடிவடைந்த நிலையில் ஊராட்சியின் நிர்வாகமானது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சி/ தனி அலுவலரிடம் இருந்து வருவதால் மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களோ அல்லது முக்குடி ஊராட்சி மன்றத்தின் ஊராட்சி எழுத்தரோ தான் 3ம் பிரதிவாதியின் தரப்பு எதிர்வாதத்ததை தொடர இயலும் என்றும், இந்த நிலையில், ஊராட்சி மன்றத்தலைவராக இருந்த முத்தையா என்பவரின் தூண்டுதலின் பேரில் இந்த மனுதார்கள்/ Proposed 4 முதல் 9 வரை பிரதிவாதிகள் வேண்டுமென்றே தாவா மனுவைத் தாக்கல் செய்துள்ளனர் என்றும், அபிடவிட்டு பாரா 3ல், பிரதிவாதிகள் தரப்பில் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்த மனுதாரர்களுக்கு தெரிய வருவதாகவும், தாவா 2வது லக்கச் சொத்தைப் பொறுத்து இந்த மனுதாரர்கள் பிள்ளையார் கோவிலை வழிபடுபவர்கள் என்ற முறையில் நடத்த வேண்டியுள்ளதாலும் எனவே, இந்த மனுதாரர்களை தாவா வழக்கில் தரப்பினராகச் சேர்த்து வழக்கு நடத்தாவிடில் பெருத்த பாதிப்பு ஏற்பட்டுவிடும் எனக் கூறியிருப்பதும் சுத்தப்பொய் என்றும், பிராது தாக்கல் காலத்திலேயே பிராது சொத்து விபரத்தில் 2வது லக்கத்தைப் பொறுத்து தென்கிழக்கு மூலையில் விநாயகர் கோவில் இருந்து வரக்கூடிய 4 செண்ட் நீங்கலாக மீதமுள்ள 1 ஏக்கர் 88 செண்ட் என்றே குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் இந்த மனுதாரர்களுக்கு இந்த வழக்கு நிலுவையில் உள்ள விபரம் நேரடியாகவே நன்கு தெரியும் என்றும், அவ்வாறு தெரிந்திருந்த நிலையில், வேண்டுமென்றே தாவா வழக்கின் தீர்ப்பினை தடுக்கும் நோக்கத்தில் தற்போது தாவா மனுவைத் தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேலும், மனுதாரர்கள் ஆறு நபர்களாக இருப்பதால் சிபிசி ஆர்டர் 1 ரூல் 8 ன் படி பிரதிநிதித்துவ சட்டத்தின்படி அனுமதி கோராமல் நேரடியாக தாவா மனுவைத் தாக்கல் செய்திருப்பதும் சட்டப்படி

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.12 17:31:52 +0530

ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மேற்கண்ட காரணத்தினால் தாவா மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியதாக உள்ளது என்றும், மனுதாரர்கள் முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவரான முத்தையா என்பவருக்கு நெருங்கிய உறவினர்கள் ஆவார்கள் என்றும், மேற்படியாரின் தூண்டுதலின் பேரிலேயே தாவா மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி முத்தையா ஊராட்சி மன்றத்தலைவராக இருந்ததால், இந்த மனுதாரர்களை வைத்து எவ்விதமேனும் பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் தாவா 2வது லக்கச் சொத்தில் என்னால் வளர்க்கப்பட்ட பலன்தரக்கூடிய வகையில் காய்கள் காயத்திருந்த நிலையில் இந்த மனுதாரர்களை வைத்து மேற்படி முத்தையா JCB இயந்திரத்தின் துணையோடு வேரூடன் பறித்து நாசம் செய்து விட்டனர் என்றும், அதனால் பல லட்சம் ரூபாய் அளவில் தனக்கு பணவிரையம் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி செயலைச் செய்த நிலையில் தற்போது தாவா மனுவையும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்படி முக்குடி ஊராட்சிக்கு உட்பட்ட செங்குளம் கிராமத்தில் சுமார் 300 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். மக்கள் தொகையில் 1000 நபர்கள் வரை வசித்து வருகின்றனர் என்றும், இதில் 6 நபர்கள் மட்டுமே தாவா மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்படி 6 நபர்களும் முத்தையாவுடன் கூட்டுச்சேர்ந்துகொண்டு தான் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்கண்ட காரணங்களினால் தாவா மனுவும் Maintainability ஆக கூடியதில்லை என்றும், எனவே தாவா மனுவை கூடுதல் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

4) இருபுறமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) மனுதாரர்கள் தங்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து வழக்கை மேல்நடத்த வேண்டுமாய் இந்த நிர் மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் 6 பேர் இணைந்து தங்களை அசல் வழக்கில் 4 முதல் 9 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமாய் கூட்டாக மனு அபிடவிட் தாக்கல் செய்துள்ளனர். தாவா 2வது இலக்க சொத்தாகிய முக்குடி குரூப் 144/2ல் 0.77.5 ஹெக்டேர் நிலம் அரசு ஆவணங்களில் அருள்மிகு பிள்ளையார் கோவில் என காண்பிக்கப்பட்டுள்ளதாகவும், தாவா 2வது

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.12 17:31:57 +0530

இலக்க சொத்திலிருந்து தான் மேற்படி பிள்ளையார் கோவில் விஷேங்கள் மற்றும் விநாயகர் சதுர்த்தி விஷேகங்களை மனுதாரர்கள் நடத்தி வருவதாகவும், மனுதாரர்கள் பிள்ளையார் கோவிலை வழிபடுவதாகவும், தாவா 2வது இலக்கச் சொத்தை வாதி எப்போதும் அனுபவம் செய்தது கிடையாது என்றும் தாவா வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்று தற்போது மனுதாரர்களுக்கு தெரிய வந்ததாகவும், எனவே 2வது இலக்க சொத்தை பொறுத்து பிள்ளையார் கோவிலை வழிபடுவர்கள் என்ற முறையில் நடத்த வேண்டி உள்ளதாகவும், தங்களை தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல்நடத்த வேண்டுமாய் மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

6) 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு அதனை அனுசரித்து வாதுரை எடுத்துரைக்கப்பட்டது. இந்த நம்பர் 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் தனக்கு பாத்தியமான தாவா அசல் வழக்கில் கண்ட 1ம் இலக்க சொத்தில் தனது அமைதியான அனுபவத்தையும், பாத்தியத்தையும் 3ம் பிரதிவாதி எவ்வித தடையும், இடையூறும் செய்யக்கூடாதென்று 1ம் 1, 2 பிரதிவாதிகள் அரசு தரப்பினர்கள் என்ற அடிப்படையிலும் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் தாவா வழக்கில் வாதி தரப்பு சாட்சியங்கள் முடிவுற்று பிரதிவாதிகள் தரப்பில் யாதொரு சாட்சியமும் இல்லை என்று முடிக்கப்பட்ட நிலையில் தற்போது மேற்படி வழக்கில் பிள்ளையார் கோவிலை வழிபடுபவர்கள் என்ற முறையில் தாவா செய்ய வேண்டி இருப்பதாகவும், இவ்வழக்கில் பிரதிவாதிகள் எவ்வித சாட்சியமும் விடவில்லை என்பது தற்போது தான் மனுதாரர்களுக்கு தெரிய வந்ததாக சொல்லி தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் தாவா மனுவை பிள்ளையார் கோவிலை வழிபடுபவர்களை முன்னிறுத்தி தாவா வழக்கில் தங்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்றால் சிபிசி கட்டளை 1 விதி 8ன் கீழ் பிரதிநிதித்துவ அடிப்படையில் தான் தங்களை தரப்பினர்களாக சேர்க்க கோரியிருக்க வேண்டும் என்றும் மேலும் தாவா சொத்தில் உள்ள பிள்ளையார் கோவில் நீங்கலாக தான் அசல் வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், எனவே மனுதாரர்களுக்கு தாவா வழக்கில் தங்களை தரப்பினர்களாக சேர்க்க கோரும் உரிமை ஏதும் கிடையாது என்றும், மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

7) இருபுறமும் கேட்கப்பட்டதிலிருந்தும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்த வகையிலும், தாவா 1வது இலக்கச் சொத்து வாதிக்கு பாத்தியமுடையது என்பதும் தாவா

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.12 17:32:02 +0530

2வது இலக்க சொத்து வருவாய் ஆவணங்களில் அரசு புறம்போக்கு என்று பதிவாகி உள்ளது என்பதும், மேற்படி 2வது இலக்கச் சொத்தை இந்த நம்பர் 1ம் எதிர்மனுதாரர்/வாதி தனக்கு பாத்தியப்பட்ட 1வது இலக்கச் சொத்துடன் சேர்த்து அனுபவம் செய்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 2வது இலக்கச் சொத்து அரசு புறம்போக்கு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் தனது அனுபவத்தை பொறுத்து இந்த நம்பர் 1ம் எதிர்மனுதாரர்/வாதி அரசு தரப்பினருக்கு எதிராகவும், அப்போது ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்காலத்தில் இருந்து வந்ததால் அவருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தற்போது ஊராட்சி மன்ற தலைவரின் பதவிக்காலம் முடிவுற்றதாலேயே இவ்வழக்கில் கட்சியை நிலைநாட்ட இந்த மனுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், பிள்ளையார் கோவிலை வழிபடுபவர்கள் என்ற ஸ்தானத்தில் தங்களை தரப்பினர்களாக சேர்க்கக்கோரிய நிலையில் தாவா அசல் வழக்கானது பிள்ளையார் கோவில் அமைந்துள்ள பகுதி நீங்கலாக தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் அறிய முடிகிறது. மேலும், அசல் வழக்கில் யாருக்கு எதிராக என்ன பரிகாரம் கோர வேண்டும் என்ற உரிமை வாதிக்கே உரியது என்ற அடிப்படையிலும், ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்காலம் முடிவுற்று விட்டால் தற்போதைய தனி அலுவலரை தரப்பினராக சேர்த்து அவர் மூலம் ஊராட்சி மன்றத்தின் கட்சியை நிலைநாட்டி கொள்ளலாமே தவிர மனுதாரர்கள் மனு அபிடவிட்டில் தெரிவித்த காரணங்களின் அடிப்படையில் அசல் வழக்கில் தரப்பினராக அவர்களை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8) முடிவாக, **மனுாரர்கள் தங்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து, மனுதாரர்கள் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் வருடம் மார்ச் மாதம் 12-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH

Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.12 17:32:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.12 17:32:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்
IA No.7/2025
in
OS no.26/2022
உத்தரவு
நாள்:12.03.2026